அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
INTERNATIONAL COUNCIL FOR EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS




# அனைத்துலகத் தாய்மொழி நாள்

## தாய்மொழிக் கல்வியின் இன்றியமையாமை - சுருக்கம்

- தாய்மொழி என்பது மாந்தரின் அடையாளமாகவும் அவரின் பெருமையாகவும் பார்க்கப்படுகிறது.
- ஓர் இனத்துக்கான அடையாளம் அவ் இனத்தின் மொழியைக்கொண்டே கிடைக்கிறது. தாய்மொழி தெரியாதவர்கள் இன அடையாளத்தை இழந்துபோவார்கள்.
- தாய்மொழியால் தன்னம்பிக்கையும் பண்பாட்டு உணர்வும் மேலோங்குகிறது. அனைத்திலும் வெற்றியீட்டுவதற்கான உள உறுதியைத் தாய்மொழிக்கல்வி வழங்குகிறது.
- ஒரு குழந்தை தனது தாய்மொழியில் சிறந்த அறிவைப் பெற்றிருந்தால், பிற மொழிகளை எளிதாகக் கற்றுக்கொள்ளும் என்பது ஆய்வு முடிவுகளாகும்.
- புலம்பெயர்ந்த நாடுகளில் தாய்மொழி வகுப்புகளில் பங்கேற்பது மாணவர்களின் பொதுக்கல்வி உயர்வில் சாதகமான விளைவைக் கொண்டிருப்பது நிறுவப்பெற்றுள்ளது.
- தமிழ்ப்பள்ளிகளுக்கு வருகைதந்து கற்கும் பிள்ளைகள் பண்புள்ளவர்களாகவும் குமுகாயத்திற்கு முன்னோடிகளாகவும் வளர்ந்து வருகின்றனர்.

# அனைத்துலகத் தாய்மொழி நாளின் வரலாறு

ஆண்டுதோறும் பெப்ரவரி 21 ஆம் நாளினை அனைத்துலகத் தாய்மொழி நாளாக ஐக்கிய நாடுகள் சபையின் யுனெசுகோ (UNESCO) அமைப்பு அறிவித்துள்ளது. (https://en.unesco.org/commemorations/motherlanguageday) பன்மொழிப் பயன்பாட்டை முன்னேற்றுவதற்காகவும், பன்முகப் பண்பாடுகளைப் போற்றுவதற்காகவும், அமைதியை நிலைநாட்டுவதற்காகவும், உலகில் உள்ள அனைத்துத் தாய்மொழிகளைப் பாதுகாப்பதற்காகவும் உலகத் தாய்மொழி நாள் கொண்டாடப்படுகின்றது.

1952 ஆம் ஆண்டு பெப்ரவரி 21 ஆம் நாள் அன்றைய கிழக்குப் பாகிசுதானில் (இன்றைய வங்காள தேசம்) ‘வங்காள மொழியையும் பாகிசுதானின் தேசிய மொழியாக அறிவிக்க வேண்டும்’ என்று போராட்டம் நடைபெற்றது. அந்தப் போராட்டத்தில் நான்கு மாணவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். வங்காள தேச அரசின் முயற்சிகள் மற்றும் அனைத்துலக அமைப்புகளது ஆதரவுகள் காரணமாக ஐக்கியநாடுகள் கல்வி, அறிவியல், பண்பாட்டு நிறுவனத்தால் (யுனெசுகோ) தங்கள் தாய்மொழிக்காகப் போராடி உயிர்த்தியாகம் செய்தவர்களின் நினைவாகவும், பல்வேறு குமுகங்களின் மொழி உரிமை, அதன் சிறப்பு, பண்பாட்டுத் தனித்தன்மைகளைப் பேணவும் அவற்றுக்கு இடையிலான ஒற்றுமையை உருவாக்கும் எண்ணத்தோடும் 1999 பெப்ரவரி 21 ஆம் நாள் அதன் பொது மாநாட்டின் 30 ஆவது அமர்வில் இந்நாள் அனைத்துலகத் தாய்மொழி நாளாக அறிவிக்கப்பட்டது. 2000 ஆம் ஆண்டு முதல் இந்த நாளானது உலகம் முழுவதும் கொண்டாடப்பட்டு வருகிறது.

## மொழி

உலகில் ஒவ்வொரு மொழியும் தனித்தன்மை, மரபு, பாரம்பரியம் என்பவற்றைக் கொண்டுள்ளது. நமது எண்ணங்களையும் உணர்ச்சிகளையும் பிறருக்கு வெளிப்படுத்த உதவுவது மொழியே. மொழி ஒரு கருவி. மாந்தர் மொழியைக் கொண்டுதான் வாழ்கின்றனர். மொழியால்தான் கருத்துப் பரிமாற்றமும் செய்கின்றனர். மொழியின் மூலமாகவே மாந்தர்களின் சிந்தனை ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறைக்குக் கொண்டு செல்லப்படுகிறது. ஒரு மொழி உயிர்ப்போடு வாழ்வதற்குப் பேச்சு மொழியும் காலம்கடந்து வாழ்வதற்கு எழுத்து மொழியும் தேவைப்படுகின்றன. மொழி கருத்தை அறிவிக்கும் கருவி மட்டும் அன்று. அது மக்களின் பண்பாட்டுடன் நெருங்கிய தொடர்புடையது. உணர்வுடன் கலந்தது. ஒருவர் தனது எண்ணத்தை வெளியிடுவதற்கும் சிந்தனையாற்றலைப் பெருக்கவும் துணையாக இருப்பது தாய்மொழியே.

## தாய்மொழி

ஓர் இனத்தின் தாய்மொழியைச் சீரழித்தாலே போதும் மக்களின் மொழியுணர்வு, இனவுணர்வு, பண்பாடு, கலை, நாகரிகம், இனமொழி வரலாற்றுப் பெருமைகள் என்று எல்லாமே சிதைந்து உருக்குலைந்து விடும். இதுவே உலக வரலாறு காட்டும் உண்மை. மாந்தர் தம் நாட்டுப்பற்று, மொழிப்பற்று, இனப்பற்றை மொழி மூலமே வெளிக்கொண்டு வருகின்றனர்.

மாந்தரின் அடையாளம் அவரது தாய்மொழிதான். கல்வி தாய்மொழி வழியாகக் கற்பிக்கப்படுவதே சிறப்பாகும். மாந்தரின் சிந்தனையும் கற்பனையும் தாய்மொழியில்தான் உருவாகின்றன. எனவே, மாந்தரின் சிந்தனை வளர்ச்சிக்குத் தாய்மொழிக் கல்வியே சிறந்தது. சிந்திக்கின்ற மொழியிலே பயிற்றுவிக்கப்படுகின்ற கல்வி, சிந்தனையைக் கூட்டுகின்றது; நுணுக்கங்களையும் அறிவியல் படைப்புகளையும் உருவாக்க மாந்தர்களைத் தயார்ப்படுத்துகின்றது. தாய்மொழிதான் சிந்திக்கும் திறனின் திறவுகோலாக இருக்கின்றது. எத்தனை மொழிகள் கற்றாலும் எந்த மொழியைக் கற்றாலும் ஒருவரின் சிந்தனை உருவெடுப்பது தாய்மொழியில்தான், தாய்மொழியால் சிந்தனை பெருகும். தாய்மொழியில் சிந்திப்பதால் உயர்ந்த கருத்துகளைச் சிறந்த சொற்களைக் கொண்டு உணர்த்த முடியும்.

## தாய்மொழிக் கல்வி

“கருவில் உள்ள குழந்தை ஏழு மாதத்திலேயே மூளை முதிர்ச்சி பெற்று ஒலிகளைக் கேட்கிறது” என்கின்றனர் மருத்துவ அறிஞர்கள். குழந்தை வளரும் சூழல் மொழித்தாக்கத்திற்கு அடிப்படையாக அமைகிறது. தாய்மொழி வழியாகக் கற்கும் சூழல் ஏற்பட்டால் மிகச் சிறந்த அறிஞர்களாக, மேதைகளாக அக்குழந்தைகள் வளர்வார்கள். குழந்தைகள் தாய்மொழிவழியாகக் கல்வி கற்றால் தரமான கல்வியைப் பெறுவார்கள். ஒரு குழந்தை தனது தாய்மொழி வழியே நல்ல குணத்தையும் தன் பண்பாட்டுச் சிறப்பை உணர்ந்து வாழும் நம்பிக்கையையும் பெறமுடியும்.

ஒரு குழந்தை தாய்மொழியைப் பயன்படுத்தும்போது அங்கே குழந்தையின் பேச்சிலும் நடைமுறையிலும் தாய்மொழி சார்ந்த வாழ்க்கைமுறை அமையப்பெறுகிறது. இத்தகு ஒரு மொழிசார்ந்த வாழ்க்கைமுறையும் மொழிசார்ந்த பண்பாட்டுமுறையும் மொழிசார்ந்த தொடர்புமுறையும் தாய்மொழிகளுக்கு மட்டுமே உரிய தனிச்சிறப்புகள்.

பிறமொழிகள் ஊடாக எம்முடைய பண்பாட்டுக் கூறுகளை உணர்ந்து கொள்ள முடியாது. தாய்மொழிக் கல்வி எம்முடைய மொழியை மட்டுமல்லாது அம்மொழி சார்ந்த பண்பாட்டினையும் அறிந்து கொள்ள வகை செய்யும். தாய்மொழியினூடாக இலக்கியம், கலைகள் யாவற்றையும் கற்கமுடியும். ஒருவர் கொண்டிருக்கும்

தாய்மொழிப்புலமை அவரது சிறப்புத் தகுதியாகக் கருதப்படும்.

அதனால், தொடக்கத்தில் தாய்மொழியைப் பேசி அதனைச் சிந்தனை மொழியாக வைத்திருக்க வழி செய்வது ஒவ்வொரு பெற்றோரினதும் கடமையும் கடப்பாடுமாகும்.

மொழி என்பது ஒரு வளம் மட்டுமல்ல, அறிவு மேம்பாட்டுக்கான வழிகாட்டி. அப்படிப்பட்ட மொழி ஒருவரது தாய்மொழியாக அமையும்போது, அதுவே அவரது இல்ல மொழியாக முதலில் அறிமுகப்படுத்தப்படும்போது, அவரது அடையாளத்துக்கும் தொடர்புத்திறன்கள் நோக்கிலான வளர்ச்சிக்கும் பல்லினப்பண்பாட்டில் அவரது தலைமைத்துவத்துக்கும் ஒரு முதலீடாக இருந்து அவரை வழிநடத்தும் என்பது மறுக்கமுடியாத உண்மை. இதைப் பெற்றோரும் ஆசிரியர்களும் குமுக ஆர்வலர்களும் இளையவர்களும் உணர்ந்து குழந்தைக்குச் சிறு வயதிலேயே தாய்மொழியைத் தர முனைவது மிகவும் இன்றியமையாதது.

இன்றைய உலகமயமாக்கத்தில் அனைத்து நாடுகளும் தாய்மொழி எனும் வளத்தை மிகவும் கவனமாக வளர்த்தெடுப்பதில் அக்கறை காட்டுகின்றன.

## தமிழ்மொழி

எங்கள் தாய்மொழியான தமிழ்மொழி தொன்மையானது. அது இயல், இசை, நாடகம் ஆகிய மூன்றும் சேர்ந்ததால் முத்தமிழ் எனப் போற்றப்படுகிறது. அறிவியலுக்கும் ஆதாரமாகத் தமிழ்மொழி விளங்குகிறது.

செம்மொழியாகத் தமிழ் உயர்ந்து நிற்பதற்கு இன்றியமையாத காரணம் அதன் தொன்மைத் தன்மையே ஆகும். தமிழினம், தமிழ்மொழி, தமிழ் இலக்கியங்கள் ஆகிய அனைத்தும் மிக்க தொன்மையானவை என்ற கருத்து ஆய்வறிஞர்களால் உறுதிப்படுத்தப்பட்டுவருகின்றது. குறிப்பாகத் தமிழின் தொன்மையைத் தமிழ் இலக்கியங்களும், அகழாய்வுகளும் உறுதிப்படுத்துகின்றன. தமிழரின் அறிவியல் நுட்பத்திற்குச் சான்றுகளாகப் பல கட்டுமானங்களும் சிற்பங்களும் விளங்குகின்றன.

உலகின் முதல் மொழி என்று வரலாற்றாளர்களால் போற்றப்படும் மொழி நமது தமிழ் மொழியாகும். சுப்பிரமணிய பாரதியார் “யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்” என்று கூறி, தமிழ் மொழியினைச் சிறப்பித்துள்ளார். இதற்கு காரணம் பாரதியார் தமிழ், கிந்தி, ஆங்கிலம் உட்பட 14 மொழிகளில் தேர்ச்சி பெற்றிருந்தமையினால் ஏனைய மொழிகளைக் காட்டிலும் சிறந்த மொழி தமிழ் எனச் சிறப்பித்துக் கூறியுள்ளார். எத்தகைய காலமாற்றத்திலும் அனைத்துப் புதுமைகளையும் உள்வாங்கி இயங்கும் தன்மை கொண்டது தமிழ்மொழி.

சங்க கால இலக்கியங்கள், இலக்கண நூல்கள், திருக்குறள், சமய நூல்கள், சித்தர்களின் பாடல்கள் இதன் தொன்மைக்குச் சான்றாக உள்ளன. ஆங்கிலம், பிரெஞ்சு, யேர்மன், ரசியன் போன்ற மொழிகள் தோன்றுவதற்கு எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு முன்பே இலக்கணத்துக்கு ஒரு தொல்காப்பியம், இலக்கியத்திற்குச் சங்க இலக்கியம், அற இலக்கியத்திற்குத் திருக்குறள் எனப் பல இலக்கண இலக்கியங்களைத் தன்னகத்தே உள்ளடக்கிய ஒரு பழைமையான மொழி தமிழ் மொழியாகும். உலகில் சங்கம் வைத்து வளர்க்கப்பட்ட ஒரே மொழி தமிழாகும். திருக்குறள் நாற்பதுக்கு மேற்பட்ட உலகமொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது என அறியமுடிகிறது.

சங்க இலக்கியங்கள் மக்கள் வாழ்வியல் நெறிகளை வெளிப்படுத்துகின்றன. உலக இலக்கியங்களுள் முதன்மை பெற்றவை சங்க இலக்கியங்களாகும். இந்த இலக்கியங்கள் தோன்றிய சமகாலத்தில் உலகில் இருந்த வேறு எந்த மொழியிலும் இவை போல் விரிவாக உருவாக்கப்பட்ட இலக்கியங்கள் தோன்றவில்லை.

மக்களின் அக வாழ்க்கையை அகத்திணை என்றும் புற வாழ்க்கையைப் புறத்திணை என்றும் தொல்காப்பியர் இலக்கணம் வகுத்துக் கூறுகின்றார். ஐம்பெரும் மற்றும் ஐஞ்சிறுங் காப்பியங்கள் தமிழின் பெருமைக்கும் சிறப்புக்கும் சான்றாக உள்ளன. தமிழ்மொழியின் மற்றுமொரு சிறப்பு அதனுடைய சொல்வளம் ஆகும். அது ஒரு பொருளைக் குறிக்கும் பல சொற்களை அதிகளவில் கொண்ட மொழியாக இருப்பதனால் சொல்வளம் மிக்க மொழியாக காணப்படுகின்றது; தனக்கெனத் தனித்த இலக்கண வளத்தைப் பெற்றுத் தனித்தியங்கும் மொழியாக விளங்குகிறது.

மொழி ஆய்வாளர்கள் செம்மொழித் தகுதிகளெனப் பதினொரு தகுதிகளை வகுத்துள்ளனர். உலகில் தமிழ், சீனம், கீப்ரு, பெர்சியன், அரபிக், இலத்தீன், கிரீக், சமற்கிருதம் ஆகிய எட்டுமொழிகள் செம்மொழித்தகுதியைப் பெற்றவை. இம்மொழிகள் செம்மொழித்தகுதிகளைப் பெற்ற போதிலும், பதினொரு தகுதிகளையும் முழுமையாகப் பெற்ற மொழியாகத் தமிழ்மொழி மட்டுமே திகழ்கிறது. இதனாலேயே உயர்தனிச் செம்மொழியாகத் தமிழ்மொழி விளங்குகிறது. 1966 ஆம் ஆண்டு மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் ‘உலகின் முதன் மொழி தமிழ் என்றும் அது செம்மொழித்தகுதியுடைய மொழி என்றும்’ நிறுவினார். 2004 ஆம் ஆண்டு தமிழ்மொழிக்கு செம்மொழித் தகுதி வழங்கப்பட்டது.

தமிழ் வளர்த்த சான்றோர்களாகத் தொல்காப்பியம் இயற்றிய தொல்காப்பியர், உலகப் பொதுமறை தந்த திருவள்ளுவர், ஔவையார் போன்றோரைக் குறிப்பிடலாம். பல வெளிநாட்டு அறிஞர்கள் தமிழ்மொழியின் இலக்கியத்தையும் இலக்கணத்தையும் கற்று, அவற்றின் சிறப்பை அறிந்து தமிழ்மொழிக்குத் தங்கள் பங்களிப்பையும் வழங்கியுள்ளனர். அவர்களுள் இத்தாலி நாட்டைச் சேர்ந்த வீரமாமுனிவர், கனடா நாட்டைச் சேர்ந்த யி. யு. போப், அயர்லாந்து நாட்டைச் சேர்ந்த ராபர்ட் கால்டுவெல் போன்றோரைக் குறிப்பிடலாம். யி.யு.போப் என்பவர் தனது கல்லறையில் “இங்கு ஒரு தமிழ் மாணவன் உறங்குகிறான்” என எழுத வேண்டுமெனக் கூறியவர்.

## தமிழர்

தமிழர்கள் இந்தியா மற்றும் ஈழத்தின் பூர்வீக குடிகளாவர். 18 ஆம் நூற்றாண்டில், பிரித்தானியா மற்றும் பிரெஞ்சு காலனித்துவ ஆட்சியாளர்கள் ஆசிய மற்றும் ஆபிரிக்காவின் பல பகுதிகளுக்குத் தமிழர்களைப் பணிகளுக்காகக் கொண்டுவந்தனர். அதே நேரத்தில், பல தமிழர்கள் பிரித்தானியரின் ஆளுகைக்குக் கீழிருந்த பர்மா மற்றும் கிழக்கு ஆபிரிக்கா போன்ற வேறு சில நாடுகளுக்கு வணிக நோக்கங்களுக்காகக் குடிபெயர்ந்தனர். பத்தொன்பதாவது நூற்றாண்டில், இந்தியா மற்றும் ஈழத்திலிருந்து சிறிய எண்ணிக்கையிலான தமிழர்கள் தகைமை அடிப்படையில் உயர்கல்விக்காகவும் தொழில்களுக்காகவும் ஆங்கிலம் பேசும் சில மேற்கத்தேய நாடுகளுக்குக் குடிபெயர்ந்தனர். ஈழத்தில் ஏற்பட்ட தமிழினவழிப்பு காரணமாக, இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஏராளமான தமிழ் மக்கள் ஈழத்திலிருந்து புலம்பெயர்ந்து ஐரோப்பிய நாடுகள், கனடா, அவுத்திரேலியா, அமெரிக்கா போன்ற நாடுகளில் வாழ்ந்துவருகின்றனர். தற்போது உலகின் ஐம்பதுக்கும் மேற்பட்ட நாடுகளில் எண்பது மில்லியனுக்கும் அதிகமான தமிழர்கள் பரவி வாழ்ந்துவருகின்றனர். தமிழ் மொழி தாய்மொழியாக இந்தியாவில் தமிழ்நாட்டிலும் ஈழத்திலும் மற்றும் புலம்பெயர்ந்து பல்வேறு நாடுகளிலும் வாழ்ந்துவரும் தமிழ்மக்களாலும் பேசப்படுகிறது. ஈழம் மற்றும் சிங்கப்பூரில் தமிழ் ஓர் உத்தியோகபூர்வ மொழியாகும். மேலும், இது இந்திய மாநிலமான தமிழ்நாடு மற்றும் இந்திய யூனியன் பிரதேசமான புதுச்சேரியில் அதிகாரபூர்வ மொழித் தகைமையைக் கொண்டுள்ளது. கேரளா, கர்நாடகா, ஆந்திரா மற்றும் தெலுங்கானா போன்ற சில தென்னிந்திய மாநிலங்களிலும், அந்தமான் மற்றும் நிக்கோபார் தீவுகளின் யூனியன் பிரதேசங்களிலும் குறிப்பிடத்தக்களவு மக்களால் தமிழ்மொழி பேசப்படுகிறது. இது மலேசியாவின் கல்வி மொழிகளில் ஒன்றாகும்.

## புலம்பெயர் நாடுகளில் தமிழ்க்கல்வி

புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் பல்வேறு சிறப்புகளைக் கொண்ட தமது மொழி, கலை பண்பாடு ஆகியவற்றைப் பேணுவதில் பெருவிருப்புடையவர்களாக வாழ்ந்து வருகின்றனர். தம்மினத்தின் தனித்தன்மையான அடையாளங்களை அடுத்த தலைமுறையினருக்கு எடுத்துச் செல்வதில் மிகுந்த ஊக்கம் உடையவர்களாகச் செயற்பட்டு வருகின்றனர். அதன் காரணமாக வையகமெங்கும் தாம் வாழ்ந்து வரும் நாடுகளின் அரசுகளின் ஒப்புதலுடனும் ஒத்துழைப்புடனும் தாய்மொழிப் பள்ளிகளை நடத்தி தமிழ் மொழியையும் கலைகளையும் இளந்தலைமுறையினருக்குக் கற்பித்து வருகின்றனர். தமிழ் இளையோர் தாங்கள் வாழும் நாடுகளில் பல்வேறுபட்ட துறைகளில் சிறந்து விளங்குவதோடு பல சாதனைகளையும் படைத்துக்கொண்டு இருக்கிறார்கள். வாழிட நாட்டு மொழியுடன் தாய்மொழியைக் கற்பதிலும் அவர்கள் பின் நிற்கவில்லை. தாய்மொழியாம் தமிழ்மொழியைக் கற்பதன் ஊடாகத் தங்கள்

அடையாளத்தைப் பேணுவதில் கண்ணும் கருத்துமாக அவர்கள் இருக்கின்றனர். இன்று உலகளவில் தமிழ்ப்பள்ளிகள் நிறுவப்பட்டு அவை சிறப்பாக இயங்கி வருகின்றன. தாய்மொழிப்பற்று, தாயகப்பற்று முதலியவற்றை வளர்ப்பதை இலக்காகக் கொண்டு இவை செயற்படுகின்றன. தமிழ்மொழியுடன் தமிழர் வரலாறு, தாயக வரலாறு, கலை, பண்பாட்டு விழுமியங்கள் போன்றவற்றைக் கற்பதற்கான வாய்ப்பினை இப்பள்ளிகள் வழங்குகின்றன. தாய்மொழியில் சிறந்து விளங்கும் ஒருவர் ஏனைய மொழிகளைக் கற்பதில் இடர்பட மாட்டார். இது உளவியல் சார்ந்த உண்மை. அடுத்த தலைமுறை தொடர்ந்தும் தமிழுடனும் தாய்நாட்டுச் சிந்தனையுடனும் வாழ்வர் எனும் நம்பிக்கை பிறக்கிறது. அத்துடன், எதிர்ப்படும் பல சவால்களையும் வென்று தமிழர் என்ற அடையாளத்தை நிலைநாட்டுவர்.

தமிழ்மொழியின் சிறப்பை உலகறியச் செய்வது இளையோரின் கடமையாகும். அவர்கள் தமிழில் படைப்பாற்றல் மிக்கோராகவும் உலகம் போற்றும் அறிவியலாளராகவும் மிளிர்ந்து தமிழினத்துக்கே பெருமை தேடித்தர வேண்டும்.

**‘தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்’** - எனும் மகாகவி பாரதியாரின் கூற்றுக்கிணங்கவும்

**‘எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு’** – எனும் பாவேந்தர் பாரதிதாசனின் கூற்றுக்கிணங்கவும்

**‘எம் தாய்மொழி தமிழை உலகெங்கும் பேணிக்காத்து தமிழராய் வாழ்வோம்’** என அனைத்துலகத் தாய்மொழி நாளில் உறுதிகொள்வோம்.




# ‘தமிழால் இணைவோம்’

icedt.education info@icedt.education +4178222 4116